# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*

# ஆண்டு 6 – பேச்சுப் போட்டி 2019

பேச்சுப் போட்டி எதிர்வரும் 01.06.2019 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.




இறைபாதம் தொழுது

அன்னை தமிழினைப் போற்றி,

ஆசிரியப் பெருந்தகைகளை நெஞ்சினுள் இருத்தி,

நடுவர் பெருமக்களுக்கு சிரம்தாழ்த்தி,

அரங்கினுள் அமர்ந்திருக்கும் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்.

எழுகதிரோன் கதிர்வீச்சின் இன்றைய புதியநாளில் என்னுரை சூடிய வாகை

## நல்லைநகர் தந்த சிறீலசிறி ஆறுமுக நாவலர்

அமுதாம் தமிழில் காதல்கொண்டு, அல்லும்பகலும் தமிழுக்கு உழைத்து, அன்னை தமிழை அச்சினில் பதித்து, மேதினி மீதினில் வலம் வரச்செய்து, அறிவால், புகழால், உயர்வால், தமிழால் இன்றும் எம்முடன் இணைந்தே வாழும் அறிஞர் பெருமான் ஆறுமுகநாவலர். பத்தொன்பதாம் நூற்றண்டு. இலங்கை அந்நிய ஆதிக்கத்துள் முற்றாக அமுங்கிய நூற்றாண்டு. தமிழ் தாழ்ந்து போனது. ஆங்கிலம் மேன்மை கண்டது. மக்கள் பாரம்பரியம் மறந்து, தமிழினை இழந்து, பண்பாடு தொலைந்து, தவித்து நின்றனர். இந்நிலை கண்டு, மனம் மிக நொந்து, தமிழ்மொழி வாழ, அரும்பணி ஆற்றிய ஈழத்தின் புதல்வன் ஆறுமுகநாவலர் . உரைநடைத் தமிழின் முன்னோடி. சமக்கிருதம், ஆங்கிலம், தமிழ் மூன்றிலும் வல்லோன். சிறந்த ஆசிரியன். விவிலிய நூலினை தமிழில் பெயர்த்தோன். பேச்சாளன், எழுத்தாளன், உரையாசிரியன் என பன்முகம் காட்டி, தமிழுக்காக வாழ்ந்த பெருமகன் ஆறுமுகநாவலர் என்பதைக்கூறி அமைகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. பரமேஸ்வரன் இரங்கநாதன்.